## ஒன்ராறியோ புதிய மனித உரிமை செயற்பாடுகள்

ஆனி 30, 2008 தொடக்கம் ஒன்ராறியோவின் புதிய மனித உரிமை செயற்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. *புதிய மனித உரிமை கோட்பாட்டிற்கிணங்க,* பாகுபாட்டினால் பாதிப்பை அனுபவித்த ஒவ்வொருவரும் நேரடியாகவே மனித உரிமை நியாயசபைக்கு மனு செய்யலாம். ஆனி 30, 2008 தொடங்கி புதிய மனித உரிமை மனுக்கள் யாவும் மனித உரிமை நியாய சபைக்கே சமர்ப்பிக்கப்படவேண்டும். ஒன்ராறியோ மனித உரிமை கொமிஷனிடம் அல்ல. பாகுபாட்டினால் புதிய *கோட்பாட்டிற்கிணங்க* பாதிப்பை அனுபவித்தவருக்கு சட்ட ஆதரவு செயற்பாடுகள் உதவிகளை வழங்கிவருகிறது.

---

## மனித உரிமை சட்ட ஆதரவு நிலையம்

*மனித உரிமை கோட்பாட்டிற்கு* முரணாக வேற்றுமையை அனுபவித்த ஒன்ராறியோ மாகாணத்தில் வசிக்கும் எல்லா சமுதாயத்தினருக்கும் சட்ட ரீதியிலான உதவிகளையும் அவர்களுக்கு தேவை ஏற்பட்டால் மனித உரிமை நியாயசபைக்கு மனுக்களை முறையிடவும் உதவிகளை வழங்க மனித உரிமை சட்ட ஆதரவு நிலையம் உள்ளது.

### மனித உரிமை சட்ட ஆதரவு நிலையத்திடமிருந்து நான் எவ்வாறு உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும்?

உங்களுக்கு ஏற்பட்ட பாகுபாட்டின் காரணமாக மனித உரிமை நியாய சபைக்கு மனுச்செய்ய வேண்டிய சட்ட சம்பந்தமான உதவிகளை பெற்றுக்கொள்ளவும் அல்லது உங்களுக்கு ஏற்பட்ட பாகுபாட்டிற்கு *மனித உரிமை கோட்பாட்டிற்கிணங்க* சுமூகமான முறையில் தீர்வுகளை பெற்றுக் கொளவதற்கான உதவிகளை பெற்றுக்கொள்ளளவும் மனித உரிமை சட்ட ஆதரவு நிலயத்தோடு நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

மனித உரிமை சட்ட ஆதரவு நியைம்
400 யூனிவேசிட்டி அவனியூ, 7வது மாடி
ரொரன்ரோ, ஒன்ராறியோ M7A 1X8
தொலைபேசி எண்: (416) 314-6266
இலவச தொடர்புக்கான தொலைபேசி எண்: 1-866-625-5179
தொலை பேசி தட்டச்சு தொடர்பு: (416) 314-6651
இலவச தட்டச்சு தொடர்பு: 1-866 612-8627
www.hrlsc.on.ca

நீங்கள் எம்முடன் நேர்முக சந்திப்பை எற்படுத்திக் கொள்ள விரும்பினால் மேல் கொடுக்கப்பட்ட தொலை பேசி இலக்கத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளலாம். நீங்கள் ரொரன்ரோ மாநகரத்திற்கு வெளியே வசிப்பவராய் இருக்கும் பட்சத்தில் நீங்கள் எம்முடன் தொடர்பு கொள்ளும் பொழுது உங்கள் தேவைகளை எவ்வாறு அணுகலாம் என்பதைக் குறித்து நாம் உங்களுடன் கலந்துரையாடுவோம். உங்கள் சமூகத்தினருக்கு உகந்த சேவைகளை வழங்குவற்கு தேவையான ஒவ்வொரு முயற்சியையும் நாம் செய்வதற்கு ஆயத்தமாய் உள்ளோம். 140 பாஷைகளில் சேவை வழங்கும் ஆற்றலும் எம்மிடம் உண்டு.

## ஒன்ராறியோ மனித உரிமை சபை

ஒன்ராறியோவின் மனித உரிமை சபை மனித உரிமைகளை விவரித்து, பாதுகாத்து பேணுவதற்கான வழிமுறைகளை கையாளுகிறது. பாகுபாட்டிற்கான அடிப்படை காரணங்களை இனங்கண்டு கொள்வதே அதன் முக்கிய குறிக்கோள் ஆகும். நீங்கள் ஒன்ராறியோ மனித உரிமை சபையை பற்றிய பொதுவான தகவல்களைப் பெற விரும்பினால் அல்லது பாகு பாட்டை குறித்து மற்றவர்களுக்கு அறியத்தர விரும்பினால் அவர்களுடன் இணைந்து செயற்பட ஒள்ராறியோ மனித உரிமை சபையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**ஏற்கனவே நான் மனித உரிமை சபையில் முறைபாடு செய்திருந்தால் என்ன செய்யலாம்?**

நீங்கள் மனித உரிமை சபையில் ஆனி மாதம் 30ம் திகதி 2008ம் ஆண்டுக்கு முன்பாக முறையிட்டிருந்தால் உங்களது முறைப்பாட்டை குறித்து மனித உரிமை சபையிடம் தொடர்பு கொள்ளுங்கள்.

ஒன்ராறியோ மனித உரிமை சபை
*180 டண்டாஸ் வீதி மேற்கு, 7ம் மாடி*
ரொரன்ரோ, ஒன்ராறியோ M7A 2R9
ரொன்ரோவில்: (416) 326-9511
இலவச இணைப்பு: 1-800-387-9080
தொலை பேசி தட்டச்சு தொடர்பு TTY (ரொரன்ரோவில்): (416) 314-6526
தொலை பேசி தட்டச்சு தொடர்பு TTY (இலவச இணைப்பு): 1-800-308-5561
www.ohrc.on.ca

## ஒள்ராறியோ மனித உரிமை நியாயசபை

ஒன்ராறியோ *மனித உரிமை கோட்பாட்டிற்கு* இணங்க சகல விதமான பாகுபாடுகளுக்கெதிராக மனுசெய்யப்பட்ட விண்ணப்பங்களை மனித உரிமை நியாயசபை மேற்கொள்கிறது. இந்த நியாயசபை விண்ணப்பங்களை கலந்துரையாடல் மூலமும், நியாயத்தை எடுத்துரைப்பதன் மூலமும் தகுந்த தீர்வுகளை காண முயல்கிறது.

கீழே தரப்பட்ட காரணங்களுக்காக நியாய சபையுடன் தொடர்பு கொள்ள முடியும்:

- பாகுபாடு சம்பந்தமான முறைப்பாடுகளை சமர்ப்பிப்பதற்கான விண்ணப்ப படிவங்களை பெற்றுக் கொள்ளவும்
- உஙகளுக்கு பாகுபாட்டினால் ஏற்பட்ட அனுபவங்களை தகுந்த முறையில் முறைப்பாடு செய்வதற்கான வழிகாட்டலை பெற்றுக் கொள்ளவும்
- பாகுபாட்டை அனுபவித்ததவர் எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும் என்ற தகவல்களை அறிந்து கொள்ளவும்
- ஏற்கனவே நீங்கள் செய்த விண்ணப்பத்தை பற்றிய விபரங்களை பெற்றுக்கொள்ளவும்

ஒன்ராறியோவின் மனித உரிமை நியாயசபை
*655 பே வீதி, 14வது மாடி*
ரொரன்ரோ, ஒன்ராறியோ M7A 2A3
ரொன்ரோவில்: (416) 326-1312
இலவச இணைப்பு: 1-866-598-0322
தொலை பேசி தட்டச்சு தொடர்பு TTY (ரொரன்ரோவில்): (416) 326-2027
தொலை பேசி தட்டச்சு தொடர்பு TTY (இலவச இணைப்பு): 1-866-607-1240
தொலை நகல்: (416) 326-2199
தொலை நகல் (இலவச இணைப்பு): 1-866-355-6099
www.hrto.ca

ஒன்ராறியோ மனித உரிமை கோட்பாடு

ஒன்ராறியோ *மனித உரிமை கோட்பாடு* கீழே கொடுக்கப்பட்ட பாகுபாடுகளை குறித்து செயற்படுகிறது

- தொழில்
- வதிவிடம்
- ஒப்பந்தங்கள்
- சேவைகள், செயல்பாடுகளும், வசதிகளும்
- தொழிற் சங்கங்கள் அல்லது பிரத்தியேகமான தொழில் சார்ந்த சங்கங்கள்

**பாகுபாடு என்றால் என்ன?**

ஒருவரை தகாத அல்லது நீதி அற்ற முறையில் நடத்துதல் பாகுபாடு எனக்கருதப்படும். கீழே தரப்பட்ட காரணங்களுக்காக ஒருவர் வேற்றுமையை அனுபவித்திருந்தால் அது பாகுபாடு எனக்கருதப்படும்.

- இனம்; நிறம்
- பரம்பரை
- பூர்வீக நாடு
- குடிஉரிமை
- இன அடிப்படை
- சமயக்கோட்பாடு (சமயம்)
- அரசாங்க நிதிஉதவி பெறுவோர் (வதிவிடம் சம்பந்தமானவர் மட்டும்)
- பாலியல் வெளிப்பாடு
- விவாக நிலை
- குடும்ப அந்தஸ்து
- குற்றங்கள் (தொழில் சம்பந்தமானவை மட்டும், மன்னிகப் பட்டவைகளாக இருக்கவேண்டும்)
- வயது
- இயலாமை
- பால் (கர்ப்பம் தரித்திருத்தல்)

பாகுபாடான நடைமுறைகளில் சில:

ஒருவரின் சலுகைகளை மறுப்பது, ஒருவரின் முன்னேற்றத்திற்கான சந்தர்பத்தினை தவிர்ப்பது/அல்லது அதனோடு மேற்குறித்த எதாவது ஒரு காரணத்திற்காக ஒருவரை கட்டாய நிர்பந்திற்குள்ளாக்குவது.

வேற்றுமை அல்லது பாகுபாடு வேலைத்தல முதலாளியோ, வீட்டு சொந்தக்காரரோ அல்லது சேவை வழங்குபவரோ வேற்றுமை பாராட்டவேண்டும் என்று நினைக்காத போது கூட ஏற்படலாம். பாகுபாடு என்பது முதலாளி, வீட்டு சொந்தக்காரர், சேவை வழங்குவோர் என்பவர் தொழிலாளி, வாடகையாளர், சேவை நுகர்வோர் ஆகியோரின் வரையறுக்கப்பட்ட *கோட்பாட்டுக்கு* முரணாக பிரத்தியேக தேவைகளை கவனிக்காமல் விடும் பொழுதும் ஏற்படுகின்றது.

பாகுபாட்டு நடைமுறைகளின் சில உதாரணங்கள்:

வீட்டு சொந்தக்காரர் நீங்கள் வதிவிடம் தேடும் பொழுது ''நாங்கள் பிள்ளைகளை எமது கட்டிடத்தில் அனுமதிப்பதில்லை''. என்று சொல்லும் பொழுது

வேலை சம்பந்தமான நேர் முக பரீட்சையின் போது தொழில் வழங்குபவர் "நீங்கள் இப்பொழுது கற்பமாயுள்ளீர்கள் அல்லது நீங்கள் கர்பமடைந்து விடுவீகள் என்ற காரணத்திற்காக எங்களால் உங்களுக்கு இந்த வேலையை தரமுடியாது" என்று சொல்லும் பொழுது

உங்கள் தொழில் அதிபர் உங்களிடம் "எமது வாடிக்கையாளருக்கு தலையை மூடி முட்டாக்கு அணிந்தவரை பிடிக்காது என்ற காரணத்தினால் எங்களால் உங்களுக்கு பதவி உயர்வு தரமுடியாது'' அல்லது ''உங்களுக்கு இப்பொழுது ஏற்பட்ட காயம் காரணமாக நீங்கள் முன்பு போல் வேலைகளை செய்யமுடியாததால் நான் உங்களை வேலையிலிருந்து நீக்குகிறேன்''